**வேளாண் பொருள்களை  கொண்டு செல்ல அனுமதிச் சீட்டு கட்டாயம்**

First Published : 20 Mar 2010 06:10:48 AM IST

திருவாரூர், மார்ச் 19: திருவாரூர் மாவட்டத்திலிருந்து வேளாண் உற்பத்திப் பொருள்களை பிற இடங்களுக்கு கொண்டு செல்ல கட்டாயம் அனுமதி சீட்டுப் பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருவாரூர் வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் கோ.தட்சிணாமூர்த்தி, செயலர் பி. காசி அய்யன் ஆகியோர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்து விற்பனைக்கு வரும் உளுந்து, பயறு, எள், நிலக்கடலை ஆகிய விளை பொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலோ அல்லது நேரடியாகவோ கொள்முதல் செய்யும் வணிகர்கள் நெல், உளுந்து, பயறு, எள், நிலக்கடலை, பருத்தி, தேங்காய் ஆகிய பொருள்களுக்கு 1987-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டப்பிரிவு 24(1) படி ஒரு சதம் மார்க்கெட் கட்டணத்தை அந்தந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செலுத்தி உரிய அனுமதிச் சீட்டு பெற்று ஒழுங்குமுறை விற்பனைக் கூட அறிவிக்கப்பட்ட மார்க்கெட் பகுதிகளை விட்டு வெளியே எடுத்துச் செல்ல வேண்டும்.

கட்டணம் செலுத்தாமல் வாகனங்களில் ஏற்றிச் செல்வது சட்டப்படி குற்றமாகும். மார்க்கெட் கமிட்டி அலுவலர்கள் வாகனச் சோதனை செய்யும் போது கட்டணம் செலுத்தாமலும், தக்க அனுமதிச் சீட்டு இல்லாமலும் விளைபொருள்களை ஏர்றிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டால், மார்க்கெட் கட்டணத்துடன் இருமடங்கு இணக்கக் கட்டணம் செலுத்த நேரிடும்.

அவ்வாறு கட்டணம் செலுத்த மறுக்கும் பட்சத்தில் விளைபொருளை நீதிமன்றத்தின் மூலம் பறிமுதல் செய்யப்படும்.

எனவே, சட்டத்துக்குட்பட்டு, மார்க்கெட் கட்டணம் செலுத்தி தக்க அனுமதிச் சீட்டுடன் விளைபொருள்களை வாகனத்தில் ஏற்றிச் செல்ல வணிகர்களும், வாகன உரிமையாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல் வரத்து அதிகரிப்பு; விலை சரிவு**

First Published : 20 Mar 2010 04:17:53 AM IST



செஞ்சி,மார்ச் 19: செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பொன்னி நெல் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் உழைப்புக்கு ஏற்ற பலன் இல்லாததால் விவசாயிகள் வேதனைக்கு உள்ளாகி உள்ளனர்.
-கடந்த சில நாள்களாக செஞ்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு நாள் ஒன்றுக்கு சராசரி 10 ஆயிரம் மூட்டைகள் வருகின்றன. மணிலா பயிர் 800 மூட்டைகள் வருகின்றன.-இது தவிர கேழ்வரகு, கம்பு, உளுந்து உள்ளிட்ட பயிர் வகைகளும் விற்பனைக்கு வருகிறது. கடந்த மாதம் பொன்னி நெல் 75 கிலோ கொண்ட மூட்டை ரூ.1300-க்கு விற்பனையானது.-கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக பொன்னி நெல் விலை ரூ.750-ல் இருந்து ரூ.950 வரை விற்பனையாகிறது. ஒரு மூட்டைக்கு சராசரி ரூ.400 சரிவு ஏற்ப்பட்டுள்ளது.-இதனால் விவசாயிகள் கடும் மன வேதனைக்கு உள்ளாகி உள்ளனர். இதே போல் கடந்த மாதம் ரூ 1000-க்கு விற்ற குண்டு நெல் தற்போது ரூ.770-க்கு விற்பனையாகிறது.-ஏடிடி 39 ரக நெல் ரூ. 760-க்கு விற்பனையாகிறது. டீலக்ஸ் பொன்னி ரூ,850-க்கு விற்பனையாகிறது. திங்கள்கிழமை ரூ.750-க்கு விலை போன குண்டு நெல் வெள்ளிக்கிழமை ரூ.690-க்கு விற்றது.-இதனால் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.
இந்த திடீர் விலை குறைவுக்கு காரணம் குறித்து நெல் வியாபாரியிடம் கேட்ட போது ""கடந்த மாதத்தைவிட கமிட்டிக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் செஞ்சி கமிட்டி மட்டுமல்ல தமிழகத்தில் பொதுவாகவே நெல்வரத்து அதிகரித்துள்ளதே விலை குறைவுக்கு காரணம்'' என்றார்.

**பண்ணை சாரா கடன் தள்ளுபடித் திட்டத்தில் ரூ. 2.05 கோடி கடன் தள்ளுபடி**

First Published : 20 Mar 2010 06:10:14 AM IST

திருவாரூர், மார்ச் 19: பண்ணைசாரா கடன் தள்ளுபடித் திட்டத்தில் இதுவரை திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.05 கோடி மதிப்பிலான கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் டி. அமலதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் ஆகியவற்றின் மூலம் பண்ணைசாராக் கடன் பெற்ற விவசாயிகளுக்கு தமிழக அரசின் சிறப்புக் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் இதுவரை 1,808 உறுப்பினர்களுக்கு ரூ.2.05 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 7,443 பேர் பயன்பெற வாய்ப்புள்ளதால், தகுதியுள்ள பண்ணைசாராக் கடன் பெற்ற பாக்கிதாரர்கள் மார்ச் 31-ம் தேதிக்குள் தொகையை முழுமையாகச் செலுத்தி வட்டிச் சலுகை, அபராத வட்டி மற்றும் இதர இன தள்ளுபடி ஆகிய சலுகைகளைப் பெற்றுப் பயன்பெறலாம்.

இதுதொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு தொடர்புடைய நகர வங்கிகள், நில வள வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளை விவசாயிகள் அணுகலாம் என அமலதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பண்ணை சாரா கடன் தள்ளுபடித் திட்டத்தில் ரூ. 2.05 கோடி கடன் தள்ளுபடி**

First Published : 20 Mar 2010 06:10:14 AM IST

திருவாரூர், மார்ச் 19: பண்ணைசாரா கடன் தள்ளுபடித் திட்டத்தில் இதுவரை திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.05 கோடி மதிப்பிலான கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் டி. அமலதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் ஆகியவற்றின் மூலம் பண்ணைசாராக் கடன் பெற்ற விவசாயிகளுக்கு தமிழக அரசின் சிறப்புக் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் இதுவரை 1,808 உறுப்பினர்களுக்கு ரூ.2.05 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 7,443 பேர் பயன்பெற வாய்ப்புள்ளதால், தகுதியுள்ள பண்ணைசாராக் கடன் பெற்ற பாக்கிதாரர்கள் மார்ச் 31-ம் தேதிக்குள் தொகையை முழுமையாகச் செலுத்தி வட்டிச் சலுகை, அபராத வட்டி மற்றும் இதர இன தள்ளுபடி ஆகிய சலுகைகளைப் பெற்றுப் பயன்பெறலாம்.

இதுதொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு தொடர்புடைய நகர வங்கிகள், நில வள வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளை விவசாயிகள் அணுகலாம் என அமலதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**சோற்றுக் கற்றாழை ஜூஸுக்கு வரிவிலக்கு**

First Published : 20 Mar 2010 12:00:00 AM IST

சென்னை, மார்ச் 19: தமிழக பட்ஜெட்டில், மருத்துவ குணம் கொண்ட சோற்றுக் கற்றாழையைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களுக்கு வரி விலக்கு
அளிக்கப்பட்டுள்ளது.
"மருத்துவ குணம் கொண்ட சோற்றுக் கற்றாழையைக் கொண்டு சாறு (ஜூஸ்), அழகு சாதனப் பொருள்கள், மலமிளக்கி போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்கும் சிறு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சலுகை அளிக்கப்படுகிறது.
ஆண்டின் மொத்த விற்பனைத் தொகை ரூ.1 கோடிக்குக் குறைவாக உள்ள வணிகர்களுக்கு மட்டும் இப் பொருள்கள் மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றார் அமைச்சர் அன்பழகன்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 73அடி**

First Published : 20 Mar 2010 04:08:40 AM IST

சேலம், மார்ச் 19: மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 73 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,192 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 35.33 டி.எம்.சி.

**மார்ச் 26-ல் விவசாயிகள்  குறைதீர்க் கூட்டம்**

First Published : 20 Mar 2010 06:09:01 AM IST

தஞ்சாவூர், மார்ச் 19: தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவல பிரதானக் கட்டடத்தில் மார்ச் 26-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் (பொ) மு. கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில், விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட விவசாயம் தொடர்பான நிறை குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம்.

**மாநில பட்ஜெட்: திருச்சி மேயர் வரவேற்பு**

First Published : 20 Mar 2010 05:55:36 AM IST

திருச்சி, மார்ச் 19: தமிழக அரசின் 2010-11-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை திருச்சி மாநகராட்சி மேயர் எஸ். சுஜாதா (காங்.) வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

வாழும் காலத்தை வரலாற்றுக் காலமாக மாற்றும் வசீகர சக்தி படைத்த தமிழக முதல்வரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் பட்ஜெட்டாக இது அமைந்துள்ளது.

காவிரியில் கதவணை அமைக்க ரூ. 183 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது, மளிகைப் பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிப்பது, மாற்றுத் திறனாளர்களுக்கு உதவித் தொகையை ரூ. 450 ஆக உயர்த்தியிருப்பது, பள்ளிகளைத் தரம் உயர்த்த ரூ. 670 கோடி ஒதுக்கியிருப்பது ஆகியவை வரவேற்கத்தக்கவை.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 2,000 அறிவித்திருப்பது விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கிறது. அனைத்துத் துறைகளுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு அயோடின் கலந்த உப்பு இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது தாய்மையைப் போற்றும் கரிசனமாகும்' என்றார் சுஜாதா.

**மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.3 கோடி அரசு ஒதுக்கீடு**

First Published : 20 Mar 2010 12:50:46 AM IST

விழுப்புரம், மார்ச் 19:  விழுப்புரம் மாவட்டத்தில் 2008-ம் ஆண்டு மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.3 கோடி இழப்பீடு வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிச்சாமி தெரிவித்தார்.

÷வெள்ளிக்கிழமை ஆட்சியர் தலைமையில் நடந்த விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் அவர் பேசியது:

÷கடந்த 2008-ம் ஆண்டு மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று ஓராண்டாக கேட்டு வருகிறீர்கள். மழை, புயல் பாதிப்படைந்த மாவட்டங்களில் விழுப்புரம் மாவட்டம் இல்லை.

÷ஆனாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதற்காக தனி கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது.

÷உயர்கல்வித்துறை அமைச்சரும் இதை முதல்வரிடம் வலியுறுத்தினார். எனவே தற்போது ரூ.3 கோடி வழங்கி அரசு சிறப்பு ஆணை வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே பாதிக்கப்பட்டோர் பட்டியல் எடுக்கப்பட்டுள்ளது.

÷அதில் 2,277 ஹெக்டர் நெல்பயிருக்கு, ஹெக்டருக்கு ரூ.2,700, மரம் சார்ந்த பயிர்களுக்கு ரூ.6,000, மற்ற பயிர்களுக்கு ரூ.4,000 வழங்கப்படும்.

÷இந்த பட்டியலில் பெயர் விடுபட்டிருப்பின் தனியாக முறையிடலாம். தற்போதைய நடைமுறையில் குறுக்கிட வேண்டாம் என்றார்.

÷மின் இணைப்பு கேட்டு காத்திருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மற்ற மாவட்டங்களில் 1993-ம் ஆண்டு வரை விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கிவிட்டார்கள். ஆனால் இங்கு இன்னும் வழங்கவில்லை என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

÷விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் அதிகமாக உள்ளதால், மின்இணைப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்கவும், 1993-ம் ஆண்டு வரை பதிவு செய்துள்ள அனைவருக்கும் மின் இணைப்பு வழங்கும் வகையில் கூடுதல் இணைப்புக்கான சிறப்பு உத்தரவைப் பெற வாரியத்துக்கு கருத்துரு அனுப்பவும் மின்வாரிய அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

÷துல்லிய பண்ணையத்தில் கரும்பு சாகுபடி செய்து, ஏக்கருக்கு ரூ.1 லட்சம் நிகர லாபம் ஈட்டிய வி.புதுப்பாக்கம் விவசாயி ஞா. வேலு, சொட்டுநீர்ப் பாசனத்தின் மூலம் சோளம் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ.21 ஆயிரம் நிகர லாபம் ஈட்டிய எடப்பாளையம் விவசாயி ஏழுமலை ஆகியோர் தங்கள் அனுபவங்களை கூட்டத்தில் தெரிவித்தனர்.

÷அவர்களுக்கு தலா ரூ.4,000 பரிசு வழங்கி ஆட்சியர் பாராட்டினார். கூட்டத்தில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ராமலிங்கம் மற்றும் பல்வேறு துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வருவாய் ரூ.63,092 கோடி; செலவு ரூ. 66,488 கோடி: புது வரி இல்லா பட்ஜெட்

First Published : 20 Mar 2010 12:48:21 AM IST

Last Updated : 20 Mar 2010 03:26:44 AM IST



புதிய சட்டப் பேரவையில் 2010}2011}ம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார் நிதியமைச்சர் க.அன்பழகன். உடன், முதல்வர் கருணாநிதி, துணை முதல

சென்னை, மார்ச் 19: புதிய சட்டப் பேரவையில் ரூ. 66 ஆயிரம் கோடிக்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் அன்பழகன் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தார்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய, புதிய வரிகள் இல்லாத பட்ஜெட்டை அவர் தாக்கல் செய்துள்ளார்.

2010-11-ம் நிதியாண்டில் வரிகள் உள்ளிட்ட இனங்களின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் மொத்த வருவாய் ரூ.63,092 கோடியாக இருக்கும். மொத்தச் செலவு ரூ.66,488 கோடியாகும்.

2006-ம் ஆண்டு திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து நிதி அமைச்சர் பொறுப்பை வகித்து வரும் அன்பழகன், இம்முறையும் வரிச்சுமை இல்லாத பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளார். மொத்த வருவாயில் 49 சதவீதம் அரசுப் பணியாளர்களுக்கான சம்பளத்துக்குச் செல்கிறது.

நிதானமான, அதே சமயம் அழுத்தம் திருத்தமான உரையுடன் மிகவும் தெள்ளத்தெளிவாக பட்ஜெட் உரையைத் தொடங்கிய அன்பழகன், புதிய சட்டப்பேரவை கட்ட முழுமுதல் காரணமாக அமைந்த முதல்வர் கருணாநிதிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வரிச் சலுகைகள்: மிளகு, சீரகம், சோம்பு உள்ளிட்ட பொருள்களின் பொடி வகைகளுக்கும் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு ஓராண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வணிகச் சின்னம் இடப்பட்ட காபித் தூள் (உடனடி காபித்தூள் தவிர), பெயிண்ட் பிரஷ், வணிகச் சின்னம் இடப்பட்ட இனிப்பு மற்றும் கார வகைகள், கத்தி, கத்திரிக்கோல், கையில் பயன்படுத்தும் ஊசிகள், கொக்கிகள்-பட்டன்கள் போன்ற தையல் பொருள்கள், வணிகச் சின்னம் இடப்பட்ட உடனடி உணவுப் பொருள்கள் (மாவு, பொடி மற்றும் ஈர மாவு உள்பட) ஆகிய பொருள்கள் மீது இப்போதுள்ள 12.5 சதவீத வரி, 4 சதவீதமாகக் குறைக்கப்படும். இந்த வரிக் குறைப்பு வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரும்.

மீனவர்களுக்கு: மீனவர்கள் பயன்படுத்தக்கூடிய ஐஸ் கட்டிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஜரிகை (பாலியஸ்டர் ஃபிலிம் நூல் மற்றும் ரேடியன்ட் நூல் நீங்கலாக) மீதான கொள்முதல் மற்றும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ரூ.176 கோடியில்: மாற்றுத் திறனாளிகளுக்கு தனித் துறை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடு ரூ. 176 கோடியாகும். இத்துறை முதல்வரின் நேரடிப் பார்வையில் இயங்கும். பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.10,148 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கரும்பு கொள்முதல் விலை உயர்வு, பதநீர் கொள்முதல் உயர்வு, பெண்கள் திருமண நிதி உதவி உயர்வு உள்ளிட்ட பல முக்கிய அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

இலவச கலர் டி.வி. திட்டத்தைத் தொடர்ந்து குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டு நடப்பு நிதி ஆண்டில் 3 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ரூ. 1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 6 ஆண்டுகளில் 21 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தை ஊக்குவிக்க வரும் நிதி ஆண்டில் ரூ. 2,500 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் என நிதியமைச்சர் அறிவித்தார். பயிர்க்கடன் மீதான வட்டியை ரத்து செய்வதற்கு ரூ. 140 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டேகால் மணி நேர உரை: அமைச்சர் அன்பழகன் காலை 9.31 மணிக்குத் தொடங்கிய உரையை பிற்பகல் 11.46 மணிக்கு நிறைவு செய்தார். ஏறக்குறைய இரண்டேகால் மணி நேரம் பட்ஜெட் உரை நீடித்தது.

வரவு } செலவு திட்டம் 2010-2011

**தமிழக அரசின் சொந்த வருவாய் (ரூ. கோடியில்)**

வணிக வரிகள் - 26,846

ஆயத்தீர்வைகள் - 7,508

முத்திரைத் தாள்களும் பத்திரப் பதிவுக் கட்டணங்களும்- 4,096

வண்டிகள் மீதான வரிகள்- 2,397

ஏனைய வரிகள்- 592

வரி அல்லாத வருவாய் - 4,101

மாநிலத்தின் மொத்த வருவாய் - 45,540

**மொத்த வருவாய் வரவுகள்**

மாநிலத்தின் சொந்த வருவாய் வரவுகள் - 45,540

மத்திய அரசிடமிருந்து பெறப்படுபவை - 17,552

மொத்த வருவாய் வரவுகள் - 63,092

மொத்த வருவாய் வரவுகள் - 63,092

மொத்த வருவாய் செலவுகள் - 66,488

வருவாய் பற்றாக்குறை - 3,396

மூலதனச் செலவு - 12,285

மூலதனச் செலவு (கடன் மற்றும் முன்பணங்களின் நிகரம் உள்பட) - 12,826

மொத்த நிதிப் பற்றாக்குறை - 16,222

மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பு - 4,36,646

நிதிப் பற்றாக்குறை மொத்த

உற்பத்தி மதிப்பின் சதவீதம் - 3.72%

**வரிச் சலுகைகள்**

மிளகு, சீரகம், சோம்பு உள்ளிட்ட பொருள்களின் பொடி வகைகளுக்கும் வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு ஓராண்டுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வணிகச் சின்னம் இடப்பட்ட காபித் தூள் (உடனடி காபித்தூள் தவிர), பெயிண்ட் பிரஷ், வணிகச் சின்னம் இடப்பட்ட இனிப்பு மற்றும் கார வகைகள், கத்தி, கத்திரிக்கோல், கையில் பயன்படுத்தும் ஊசிகள், கொக்கிகள்-பட்டன்கள் போன்ற தையல் பொருள்கள், வணிகச் சின்னம் இடப்பட்ட உடனடி உணவுப் பொருள்கள் (மாவு, பொடி மற்றும் ஈர மாவு உள்பட) ஆகிய பொருள்கள் மீது இப்போதுள்ள 12.5 சதவீத வரி, 4 சதவீதமாகக் குறைக்கப்படும். இந்த வரிக் குறைப்பு வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரும்.

**கான்கிரீட் வீடுகள்**

இலவச கலர் டி.வி. திட்டத்தைத் தொடர்ந்து குடிசைகள் இல்லாத தமிழகத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டு நடப்பு நிதி ஆண்டில் 3 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு ரூ. 1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 6 ஆண்டுகளில் 21 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகளுக்கு...**

மாற்றுத் திறனாளிகளுக்கு தனித் துறை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடு
ரூ. 176 கோடியாகும். இத்துறை முதல்வரின் நேரடிப் பார்வையில் இயங்கும். பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.10,148 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**விவசாயம்**

கரும்பு கொள்முதல் விலை உயர்வு, பதநீர் கொள்முதல் விலை உயர்வு, பெண்கள் திருமண நிதி உதவி உயர்வு உள்ளிட்ட பல முக்கிய அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

விவசாயத்தை ஊக்குவிக்க வரும் நிதி ஆண்டில் ரூ. 2,500 கோடி பயிர்க்கடன் வழங்கப்படும் என நிதியமைச்சர் அறிவித்தார். பயிர்க்கடன் மீதான வட்டியை ரத்து செய்வதற்கு ரூ. 140 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கு**

மீனவர்கள் பயன்படுத்தக் கூடிய ஐஸ் கட்டிகளுக்கு வரிவிலக்கு  அளிக்கப்பட்டுள்ளது

தினமலர்

**வேம்பு மருந்து 'மர்மம்'; வேளாண் பல்கலை ஆய்வு**

அன்னூர் : வேளாண்துறை தெளித்த மருந்தால் தர்பூசணி மற்றும் அரசாணிக்காய் கொடிகள் கருகியதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட தோட்டங்களில் வேளாண் பல்கலை பேராசிரியர்கள் ஆய்வு செய்தனர். அன்னூர் வட்டாரத்தில் 7.000 ஏக்கரில் பயிரிடப்பட்ட மல்பெரி, பப்பாளி, கத்தரி உள்ளிட்ட பயிர்களை கள்ளிப்பூச்சி தாக்கியது. இதனால், விளைச்சல் பாதியாக குறைந்து, விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதற்காக வேளாண் துறை, தோட்டக் கலை மற்றும் பட்டுவளர்ச்சித்துறை சார்பில் இலவசமாக வேம்பு மருந்து தெளிக்கும் பணி கடந்த ஒரு மாதமாக நடக்கிறது.

இதில், கதவுகரை பகுதியில் மருந்து தெளித்த தோட்டங்களில் இரண்டரை ஏக்கரில் பயிரிட்ட தர்பூசணி மற்றும் அரசாணிக்காய் கொடிகள் கருகி விட்டதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இந்த புகாரையடுத்து, தமிழ்நாடு வேளாண் பல்கலையின் பூச்சியியல் துறை பேராசிரியர் தண்டபாணி, நோயியல் துறை இணை பேராசிரியர் நக்கீரன் ஆகியோர் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட தோட்டத் தில் உள்ள தர்பூசணி, அரசாணி கொடிகளை பார்வையிட்டனர். அங்கிருந்த மண், கொடி, வேர் ஆகியவற்றை வெவ்வேறு இடங்களில் இருந்து சேகரித்தனர். வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட வேம்பு மருந்து பாட்டிலையும் திரும்பப் பெற்றனர். பின் அவர்கள் கூறுகையில்,' பல்கலையில் உள்ள பரிசோதனை கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டு, இரண்டு நாட்களில் காரணம் தெரிந்து விடும். 'கருகியதற்கான காரணம், மேற் கொண்டு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு உரிய அறிவுரை வழங்கப்படும்' என்றனர். வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) சீனிராஜ் கூறியதாவது:பொதுவாக நம்

பகுதியில் தர்பூசணி நல்ல விளைச்சல் கிடைப்பதில்லை. நம் பகுதியில் அதிக வெப்பத்தின் காரணமாக கொடியின் வேர் கருகி விடுகிறது.

இதனால், வேரில் இருந்து கொடிக்கு கிடைக்க வேண்டிய சத்துக்கள் கிடைக்காமல் தர்பூசணி வளர்ச்சி குறைந்து விடுகிறது. சுக்ரமணிக்கவுண்டன்புதூரில் வேம்பு மருந்து தெளிக்காத தர்பூசணி கொடிகளும் வெப்பத்தால் கருகியுள்ளன. இங்கு கொடிகள் கருகியதற்கு வேம்பு மருந்து காரணமல்ல. ஆனாலும், பல்கலையிலிருந்து கிடைக்கும் முடிவை பொறுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு சீனிராஜ் தெரிவித்தார். ஆய்வில், துணை வேளாண் அலுவலர் ரங்கராஜ், துணை தோட்டக்கலை அலுவலர் சந்திரன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

**கால்நடைகளுக்கு தட்டுபாடின்றி தீவனம் வேளாண் பாதுகாப்பு திட்டத்தில் ஏற்பாடு**

கோபிசெட்டிபாளையம்: கரும்பு தோகையை கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்தும் வகையில் தேசிய வேளாண் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 'தீவன குழிகள்' அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இதனால், கோடை காலத்தில் கால்நடைகளுக்கு தட்டுப்பாடின்றி தீவனம் கிடைக்கும். மேய்ச்சல் நிலத்தை மையமாக வைத்தே கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பசு, எருமை, ஆடு போன்ற கால்நடைகள் பால் உற்பத்தியில் முக்கிய பங்காற்றுகின்றன. விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை, அதிகப்படியான உரச்செலவு, நவீன கலாச்சாரத்துக்கு மாறிவரும் வாழ்க்கை முறையால் விவசாய நிலங்களின் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. இதனால், கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. இதனால், பால் உள்ளிட்ட உணவுப் பொருட்களில் மனித உடலுக்கு தேவையான சத்தும் குறைவாக கிடைக்கிறது.

கோடை காலத்தில் விவசாய நிலங்கள் தரிசாக இருப்பதால், கால்நடைகளுக்கு போதிய தீவனம் இல்லாத நிலை ஏற்படுகிறது. கால்நடை வளர்ப்பு குறைந்து வருவதால் பால் உற்பத்தியும் குறைந்து விடுகிறது. பெரும்பாலான நெல் வைக்கோல் மற்றும் கரும்பு தோகைகள் பருவ காலங்களில் வீணடிக்கப்படுகிறது. இதை தடுத்து கோடைக்காலத்தில் பயன்படுத்தும் வகையில் கரும்பு தோகையை பதப்படுத்தி பாதுகாக்க மத்திய வேளாண் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தீவன குழிகள்' அமைக்க மத்திய வேளாண் துறை முடிவு செய்துள்ளது.பருவ பயிரான கரும்பு கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் அதிளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு டன் கரும்பில் 150 கிலோ வரை தோகை கிடைக்க வாய்ப்புண்டு. இதை பதப்படுத்தி தீவனமாக மாற்றுவதன் மூலம் கோடைக்காலத்தில் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்த முடியும். காய்ந்த புல்லை காட்டிலும் இனிப்பு சுவை கொண்ட கரும்பு தோகை கால்நடைகளுக்கு நல்ல உணவாகும். கால்நடைகளும் பதப்படுத்தப்பட்ட கரும்பு தோகையை விரும்பி உண்ணுவதால் எரிசக்தி மற்றும் புரத சத்தின் அளவும் அதிகரிக்கிறது.

பதப்படுத்தபடாத கரும்பு தோகையில் 1.86 சதவீத புரதமும், 44.73 சதவீதம் செரிமான சத்துகளும் உள்ளன. ஆனால், பதப்படுத்தப்பட்ட கரும்பு தோகையில் 5.81 புரதமும், 47.53 செரிமான சத்துகளும் அதிகரிக்கிறது. ஒரு ஏக்கரில் கிடைக்கும் 7,000 கிலோ கரும்பு தோகையை கொண்டு தயாரிக்கப்படும் தீவனத்தை கொண்டு ஒரு பசு மாட்டுக்கு நாள்தோறும் 15 கிலோ வீதம் கொடுத்தால் கூட ஆண்டு முழுவதும் பராமரிக்க முடியும். இதனால் விவசாயிகள் அரசு தரும் மானிய உதவி தொகை மூலம் கரும்பு தோகையை பதப்படுத்த தீவன குழிகள் அமைக்கும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். தாளவாடி, டி.என். பாளையம், சத்தி, அம்மாபேட்டை, பவானிசாகர், நம்பியூர், பவானி, அந்தியூர், மற்றும் கோபி உள்பட ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களில் 14 இடங்களில் கரும்பு தோகையை பதப்படுத்த தீவன குழிகள் அமைக்கும் பணி கால்நடை துறை மூலம் நடந்து வருகிறது. தீவன குழிகள் அமைக்க 15 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு தேசிய விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மூலம் மானியம் வழங்கப்படுகிறது. கோபி

பஞ்சாயத்து யூனியனில் கடுக்காம்பாளையத்திலும், டி.என்.பாளையம் பஞ்சாயத்து யூனியனில் கள்ளிப்பட்டி பகுதியிலும் முதல் கட்டமாக தீவன குழிகள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

**ஒரே நாளில் மஞ்சள் விலை ரூ. 1000 குறைந்தது**

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை திடீரென குவிண்டாலுக்கு 13 ஆயிரத்து 900 ரூபாயாக உயர்ந்ததால் மஞ்சள் மார்க்கெட்டில் விவசாயிகள் குவிந்தனர். நேற்றைய மார்க்கெட்டில் திடீரென மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வீழ்ச்சி அடைந்தது. ஈரோட்டில் ஒழுங்கு முறை விற்பனை கூடம், வெளி மார்க்கெட், கோபி சொசைட்டி, ஈரோடு சொசைட்டி என நான்கு மஞ்சள் மார்க்கெட்டில் மறைமுக ஏலம் நடக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், கோபி, அம்மாபேட்டை, கொடுமுடி, கொளாநல்லி உள்ளிட்ட பகுதிகளிலும், சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை மற்றும் கர்நாடகா மாநிலப்பகுதி மைசூர் பகுதியில் மஞ்சள் அறுவடை மும்முரமாக நடக்கிறது. மஞ்சள் சீஸன் துவங்கி உள்ளதால் மஞ்சள் மார்க்கெட்டுக்கு தினசரி 5,000 மூட்டை வரத்தாகிறது.

சென்ற ஆண்டில் மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நடப்பாண்டில் ஜனவரி மாத இறுதியில் இருந்து மஞ்சள் சீஸன் துவங்கியது. மஞ்சள் சீஸன் துவங்கிய நேரத்தில் மஞ்சள் விலை 3,700 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்து, ஒரு குவிண்டால் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த விலை மூன்று மாதமாக நீடித்தது.மார்ச் 17ம் தேதி மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 2,400 ரூபாய் திடீரென அதிகரித்து 13, ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்கப்பட்டது. நேற்று முன்தினம் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரை மேலும் அதிகரித்து ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 917 ரூபாய்க்கு விற்பனை செய்து வரலாற்று சாதனை படைத்தது.

மஞ்சள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தாங்கள் அறுவடை செய்த மஞ்சளை இருப்பு வைக்காமல், உடனடியாக மார்க்கெட்டுக்கு எடுத்து வந்தனர். நேற்று மஞ்சள் மார்க்கெட்டில் விவசாயிகள் அதிகளவு வந்தனர்.
நேற்றைய நிலவரப்படி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 980 ரூபாய், கிழங்கு மஞ்சள் 12 ஆயிரத்து 917 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று முன்தினம் மார்க்கெட்டை விட நேற்றை மார்க்கெட்டில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்தது. திடீரென மஞ்சள் விலை குறைந்ததால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

**செண்டுமல்லி விலை சரிவால் விவசாயிகள் கவலை**

டி.என்.பாளையம்: சத்தியமங்கலம், டி.என்.பாளையம் பகுதியில் செண்டுமல்லி விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் இருந்து பூக்கள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பூக்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எந்நேரமும் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கும் பூ மார்க்கெட்டையும், வடவள்ளியில் உள்ள ஏ.வி.டி. தொழிற்சாலையையும் நம்பி டி.என்.பாளையம், சத்தியமங்கலம், பவானிசாகர் போன்ற பகுதிகளில் விவசாயிகள் செண்டுமல்லி சாகுபடி செய்கின்றனர்.

செண்டுமல்லி மூன்று மாதப்பயிர். மார்கழியில் நடவு நட்டு, பங்குனியில் அறுவடை செய்வர். டி.என்.பாளையம், பவானிசாகர், சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் செண்டு மல்லி சாகுபடி செய்துள்ளனர். வாசனை திரவியம் தயாரிக்க ஏ.வி.டி. தொழிற்சாலைக்கு இந்த பூக்கள் எடுத்து கொள்ளப்படுகின்றன. செண்டு மல்லிக்கு சாகுபடி செலவு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் ஆகிறது. பூச்சி மருந்துகளும் இடுபொருட்களும் விலையேற்றமாகியுள்ள

இந்நேரத்தில் செண்டு மல்லியை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டமும் ஏமாற்றமும்தான் மிஞ்சியுள்ளது. ஏனென்றால், செண்டுமல்லியின் விலை வெகுவாக குறைந்துள்ளது. சீஸனின் போது ஒரு கிலோ 40 ரூபாய்க்கும் மற்ற நாட்களில் 35 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்ட செண்டு மல்லி, இன்றோ மூன்று ரூபாய்க்கு விவசாயிகள் விற்பனை செய்யும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. அளவுக்கு அதிகமாக பூக்கள் உற்பத்தியானதால், செண்டு மல்லியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. போட்ட முதலை திரும்பப் பெற முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். பவானியாறு குடிநீர் பாதுகாப்பு இயக்கத்தை சேர்ந்த கிரி கூறியதாவது: செண்டு மல்லிக்கு நல்லவரவேற்பு இருப்பதால் எல்லோரும் செண்டு மல்லியை சாகுபடி செய்தனர்.

ஆயிரக்கணக்கான ஏக்கரில் செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டு நல்ல விளைச்சல் கிடைத்தாலும் சந்தையில் ஏற்பட்ட விலை சரிவால், போட்ட அசலை எடுக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். அளவுக்கு அதிகமான உற்பத்தியின் விளைவுதான் இந்த வீழ்ச்சி. இவ்வாறு அவர் கூறினார்.

**கூட்டுறவு மூலம் விதை கொள்முதல் திட்டத்திற்கு விவசாயிகள் வரவேற்பு**

திருவரங்குளம்:வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விதை கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.கூட்டுறவு துறையும், வேளாண் துறையும் இணைந்து கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விதை உற்பத்தி கொள்முதல் மற்றும் விற்பனை திட்டத்தை தொடங்கி உள்ளன.

இத்திட்டம் குறித்து விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக திருவரங்குளம் வட்டாரத்தில் பூவரசகுடி, குளவாய்பட்டி, வேங்கிடகுளம், வெண்ணாவல்குடி, வம்பன், ஆலங்குடி, பாச்சிக்கோட்டை, நெடுவாசல், கீரமங்கலம், சேந்தன்குடி நகரம், கொத்தமங்கலம் ஆகிய கிராமங்களில் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

வம்பனில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் திருவரங்குளம் வட்டார கூட்டுறவு கள அலுவலர் தமிழ்ச்செல்வன், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி உதவி பொது மேலாளர் மதன்மோகன், மேற்பார்வையாளர் திருவேங்கடம், உதவி வேளாண்மை அலுவலர்கள் பாலகிருஷ்ணன், பிரதீப், செந்தில், வம்பன் கூட்டுறவு சங்க செயலாளர் கோவிந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கள அலுவலர் தமிழ்செல்வன் பேசுகையில், வேளாண்மை துறையின் வழிகாட்டுதலுடன் விவசாயிகள் விதைகளை உற்பத்தி செய்து தரச்சான்று பெற்றால் அவ்விதைகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் கொள்முதல் செய்ய தயாராக உள்ளது. மேலும், இவ்வாறு விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகள் விவசாயிளுக்கே நியாய விலையில் வழங்கப்படும் என்றார்.

வேங்கிடகுளத்தில் நடந்த கூட்டத்திற்கு ஊராட்சி தலைவி விண்ணொளி மேரி தலைமை வகித்தார். கூட்டத்தில், கரும்பு சாகுபடி விவசாயிகள் இருவருக்கு பைப்லைன் அமைக்க மொத்தம் ரூ.45 ஆயிரம் நிதியுதவி வழங்கப்பட்டது. சங்க செயலாளர் ரத்தினம் நன்றி கூறினார். கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விதை கொள்முதல் செய்து விற்பனை செய்யும் இத்திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

---

இத்திட்டத்தினால் விவசாயிகள் தற்போது உரத்தேவைக்கு கூட்டுறவு சங்கங்களை அணுகுவதைப்போல விதை தேவைக்கும் கூட்டுறவு சங்கங்களை பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்படும் என்றும், இதனால் விவசாயிகள் விதைக்காக தனியார் கடைகளை தேடி செல்வது குறையும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

---

**மஞ்சள் அறுவடை செய்ய தண்ணீர் இல்லை பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள் சோகம்**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில் விவசாய கிணறுகள் வறண்டதால், பயிரிடப்பட்ட மஞ்சள் அறுவடை செய்ய தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் கடந்த ஆண்டு மஞ்சள் விலை ஒரு குவிண்டல் 12 ஆயிரம் ரூபாயை தாண்டியதால் மஞ்சள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

பனமரத்துப்பட்டி பகுதியில் பள்ளித்தெருப்பட்டி, பெரமனூர், நல்லியாம்புதூர், குரால்நத்தம், கோம்பைக்காடு, பெரமனூர், மல்லூர் உள்ளிட்ட பகுதியில் பல நூறு ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் பயிரிட்டனர். ஃபிப்ரவரி முதல் அறுவடை துவங்குவது வழக்கம். மஞ்சள் பயிருக்கு வாரம் ஒரு முறை தவறாமல் தண்ணீர் விடவேண்டும். நடப்பாண்டில் பருவ மழை பொய்த்ததால், விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது.மஞ்சள் அறுவடை செய்யப்படும் ஒரு மாதத்திற்கு முன் மேற்புறத்தில் இருக்கும் தண்டு பகுதி அறுத்து எடுத்துவிட்டு, மண்ணில் இருக்கும் கிழங்கு பகுதி வளர்ச்சி அடைய தண்ணீர் விட வேண்டும். அதன்பிறகு மண்ணில் உள்ள கிழங்கு பகுதி வெட்டி எடுக்கப்பட்டு, பதப்படுத்தி விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது பனமரத்துப்பட்டி பகுதியில் மஞ்சள் அறுவடை சீஸன் துவங்கி உள்ளது. கிணறு வறண்டு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால், மண்ணில் உள்ள மஞ்சள் கிழங்கை வெட்டி எடுக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது: மஞ்சள் அறுவடை செய்ய தேவையான தண்ணீர் இல்லை. தண்ணீர் விலைக்கு வாங்கி மஞ்சள் பயிரிட்ட வயலில் விட்டு, அறுவடை செய்து வருகிறோம். 200 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு டேங்க் தண்ணீர், தற்போது 400 ரூபாய் வரை அதிகரித்துவிட்டது. தண்ணீர் விலைக்கு கிடைப்பதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. தண்ணீர் இல்லாததால் நன்கு விளைந்த மஞ்சள் அறுவடை செய்ய முடியாமல் வயலில் காய்ந்து கிடக்கிறது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலையில் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் பிரதான கட்டிடத்தில் மார்ச் 26ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் டி.ஆர்.ஓ., கருணாகரன் தலைமையில் நடக்கிறது. இக்கூட்டத்தில், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்றவை குறித்த கருத்துக்களை தெரிவிக்கலாம், என டி.ஆர்.ஓ., கருணாகரன் தெரிவித்தார்.

**பருவநிலை மாற்றத்தால் மாய்காய் விளைச்சல் பாதிப்பு**

பெரியகுளம் : மாங்காய் விளைச்சல் பாதிப்பிற்கு பருவ நிலை மாற்றம் தான் காரணம் என விவசாயிகள் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்பில், தேனி மாவட்ட விவசாயிகள் கருத்தரங்கு பெரியகுளத்தில் நடந்தது. ஜே.ஏ., மகளிர் கல்லூரி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆரோக்யம் ததேயூஸ் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் ஏசுதங்கம் முன்னிலை வகித் தார். ஏ.டி.எஸ்.பி., ஜான் செல்லையா, செயலாளர் ரெஜினாள், தேனி மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் நாகராஜ், முன்னோடி விவசாயி சிதம்பரசூரியவேலு, தோட்டக்கலைக் கல்லூரி பேராசிரியர் செல்வராஜன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். விவசாயிகள் கேட்ட கேள்விக்கு முன்னாள் முதல்வர் அன்பு பதிலளித்தார்.

அவர் பேசுகையில், 'உலக வெப்பமயமாதலை தடுப்பதற்கு அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். இந்தாண்டு

மாங்காய் விளைச்சல் இல்லாததற்கு பருவநிலை மாற்றம் தான் காரணம். முன்பெல்லாம் 'அடைமழை' பெய்கிறது என கூறினோம், இயற்கையை நேசிக்காவிட்டால் வரும் காலங்களில் 'அடடா' மழை பெய்கிறது என அதிசயிக்கும் காலத்தை உருவாக்க கூடாது' என்றார். ஏற்பாடுகளை தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செயலாளர் வின்சென்ட் செய்திருந்தார். பேராசிரியை ஜோசிந்தா நன்றி கூறினார்.

**நெல் கொள்முதலில் 'சிண்டிகேட்'புரோக்கர்களால் விலை வீழ்ச்சி: குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

திருவண்ணாமலை : தி.மலை மாவட்டத்தில், வேளாண் விற்பனை கூடங்களில் நெல் கொள்முதல் செய்யப்படுவதில் புரோக் கர்களுக்கு இடையே 'சிண்டிகேட்' அமைத்துள்ளனர். இதன் காரணமாக குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்படுவதாக மா வட்ட குறைதீர்வு கூட்டத் தில் விவசாயிகள் புகார் கூறினர்.திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜேந் திரன் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ. விஸ்வநாதன், வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) கோமதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) அன்பரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியவுடன், டி.ஆர்.ஓ. மற்றும் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஆகியோர் இந்த மாதம் ஓய்வு பெறுவதையொட்டி, விவசாயிகள் சார்பில் அவர்களது பணியை பாராட்டி, மரியாதை செய்யப்பட்டது.இதைத்தொடர்ந்து, கூட் டத்தில் விவசாயிகள் பேசியதாவது:தி.மலை மாவட்டத்தில் இப்போது நெல் அறுவடை காலமாக உள்ளது. ஆனால், வேளாண் விற்பனை கூடங்களுக்கு நெல் மூட்டைகளை கொண்டு சென்றாலும் அவைகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகளுக்குதான் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால், புரோக்கர்கள் தங்களுக்குள் 'சிண்டிகேட்' அமை த்துக்கொண்டு குறைந்த விலைக்குதான் நெல் கொள் முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கோ, பொதுமக்களுக்கோ எந்த நன்மையும் கிடைக்கவில் லை. நெல் வரத்து அதிகமாக உள்ள நிலையில், விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்தும் வகையில் நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் நேரடி நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.அதேபோல், தி.மலையில் சில தனியார் பஸ்களில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பப்படுகிறது. சில பாடல்களை கேட்கவே முடிவதில்லை. பயணிகளுக்கு பாதிப்பாக உள்ளது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.போளூரில் பயணிகள் நிழற்குடை சீரமைக்கும் பணி மிகவும் தாமதமாக நடக்கிறது. போளூர் முதல் வசூர் வரை குண்டும், குழியுமாக உள்ள மெயின் ரோட்டால் அடிக்கடி விபத் துகள் ஏற்படுகிறது.

மற்ற ஆலைகளை போல் போளூர் தரணி சர்க்கரை ஆலை மூலமும், இலவசமாக விதை கரும்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வட்டியின்றி விவசாயத்துக்கு நகைக்கடன் வழங்கப்படுவதை குறிப்பிடும் வகையில் அனைத்து தொடக்க வேளா ண்மை கடனுதவி சங்கங்கள் முன்பாக அறிவிப்பு பலகைகள் வைக்க வேண்டும்.இவ்வாறு விவசாயிகள் பேசினர்.இதைத்தொடர்ந்து, கலெக்டர் ராஜேந்திரன் பேசியதாவது:தி.மலையில் மருத்துவ கல்லூரி அமைக்கப்படுவதாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. மே லும், நேரடி நெல் கொள்முதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளின் அனைத்து கோரி க்கைள் குறித்தும் பரிசீலனை செய்து உரிய தீர்வு ஏற்படுத்தப்படும்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.

**மரக்கன்று நடும் விழா**

போளூர் : போளூர் அடுத்த வெண் மணி கிராமத்தில், அமைதி அறக்கட்டளை சார்பில் மரக் கன்றுகள் நடும் விழா நடந் தது. எம்.எல்.ஏ., விஜயகுமார் தலைமை வகித்து, பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி பேசினார். இதையடுத்து

வெண்மணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டன. பின்னர், கிராமத்தில் உள்ள 300 பெண்கள் ஒரே இடத்தில் கூடி அவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச மரக்கன்றுகளை நட்டனர். ஒன்றிய கவுன்சிலர் கீதா, அறக்கட்டளை செயலாளர் ராஜாராமன், பஞ்., தலைவர் கவிதா, ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உட்பட பலர் பங்கேற் றனர். பஞ்., துணைத்தலைவர் ராகினி நன்றி கூறினார்.

**விதை கிராம திட்ட பயிற்சி**

அரக்கோணம் : வேலூர்பேட்டை கிராமத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண்மை துறை சார்பில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் வேலூர் கிராமத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு, பஞ்., தலைவர் பஞ்சாட்சரம் தலைமை வகித்தார். அரக்கோணம் வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) பாலுமகேந்திரன் முன்னிலை வகித்தார்.
முகாமில், விவசாயிகளுக்கு நெல், மணிலா, பயறு வகை பயிர்களில் விதை நேர்த்தி, பயிர்களில் கலவன்களை எடுத்தல், அறுவடைக்கு பின் நேர்த்தி மற்றும் மணிலாவில் ஜிப்சம் இடுதல் மற்றும் பயறு வகை பயிர்களில் சாகுபடி குறிப்பு, ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், பயிர்களின் பூச்சி தாக்குதல் மற்றும் நிர்வகிக்கும் முறைகள், நோய்கள் மற்றும் நிர்வகிக்கும் முறைகள் மற்றும் பயிறு வகை பயிர்களில் 2 சதவீத டிஏபி கரைசல் தெளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை எடுத்து கூறினர். உதவி வேளாண்மை அலுவலர்கள் விமல், முருகன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.வேலூர் பேட்டை கிராம உதவி வேளாண்மை அலுவலர் மகேந்திரன் நன்றி கூறினார்.

**ஏப்ரல் முதல் உரம் விலை உயர்வு : பதுக்கினால் நடவடிக்கை தேவை**

விருதுநகர் : ஏப்ரல் முதல் தேதியிலிருந்து உரம் விலையை உயர்த்தப்போவதாக அரசு அறிவித்துள்ளது. பழைய இருப்புகளை பதுக்கி அதிக விலைக்கு விற்பதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், தனியார் கடைகளில் உரங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. யூரியா மூடைக்கு 251 ரூபாய், டி.ஏ.பி., 486,பெட்டாஷ் 231ரூபாய்க்கு விற்கப்படுகின்றன.
விலை உயர்வு: உரங்களின் விலை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து உயர்த்தப்போவதாக அரசு அறிவித்துள்ளது. யூரியா மூடைக்கு 50 ரூபாயும், டி.ஏ.பி., பொட்டாஷ் போன்ற உரங்களின் விலை அதிகரிக்கலாம் என விவசாயிகள் ரிவித்தனர். இதை தொடர்ந்து, தமிழகம் முழுவதும், குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த உரங்களை பதுக்கி செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தும் நிலை உள்ளது.
இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்க தலைவர் ராமச்சந்திரராஜா கூறியதாவது: பழைய இருப்புகளை கணக்கில் கொண்டு வர வேண்டும். அவற்றை பழைய விலைக்கே விற்பனை செய்ய வேண்டும். தனியார் கடைகளில் பதுக்கல் செய்து உயர்த்தப்பட்ட விலைக்கு விற்பனை செய்வதை தடுக்க வேண்டும், என்றார்

**கொத்தமல்லிக்கு கூடுதல் விலை கிடைக்காததால் இருப்பு வைப்பு**

உடுமலை : கொத்தமல்லிக்கு விலை கிடைக்காததால், விவசாயிகள் தொடர்ந்து இருப்பு வைத்துள்ளனர்.தளி, வாளவாடி, மொடக்குப்பட்டி, அந்தியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில், 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மானவாரிப்பயிரான கொத்தமல்லி சாகுபடி செய்யப்பட்டது. ஓர் ஆண்டிற்கும் மேலாக மல்லிக்கு நல்ல விலை கிடைக்காததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: மானவாரிப்பயிரான கொத்தமல்லி சாகுபடிக்கு, ஏக்கருக்கு 6 ஆயிரம் ரூபாய் வரை சாகுபடி செலவாகிறது.

ஆனால், கொத்தமல்லிக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைத்த போதும் நல்ல விலை கிடைக்கவில்லை. இந்த ஆண்டு போதிய மகசூல் இல்லாத போதும் விலை ஏறவில்லை. கடந்த இரண்டு ஆண்டாக மல்லிக்கு தொடர்ந்து நல்ல விலை கிடைக்காமல் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு 40 கிலோ மூட்டை 4000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், தற்போது கொத்தமல்லிக்கு 1500 ரூபாய் தான் விலையாக உள்ளது. இதனால், தொடர்ந்து கொத்தமல்லி இருப்பு வைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**அழிந்து வரும் அரிய வகை 'சிறு தானியங்கள்'**

*மார்ச்* 20,2010,00:00 IST

போடி: கடந்த பல ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்படாததாலும், விவசாயத் துறையினர் புறக்கணித்ததாலும், அன்றாட உணவாக பயன்படுத்தி வந்த பாரம்பரியமான சிறு தானியங்கள் அழிந்து வருகின்றன. நம் முன்னோர் உணவாக பயன்படுத்தி வந்த சாமை, குதிரைவாளி, தினை போன்ற சிறு தானியங்கள், பல இடங்களில் காண்பது அரிதாகிவிட்டது; அவற்றுக்கான விதைகளும் தற்போது கிடைப்பதில்லை. ரேஷன் கடைகளில் ஒரு ரூபாய் அரிசி சப்ளை செய்யப்பட்டு வருவதாலும், நெல் அரிசி சோறு சாப்பிடுவது சமூக அந்தஸ்து என்ற நிலை ஏற்பட்டதாலும், தொலை தூர கிராமத்தினரிடம் கூட, சிறு தானியங்களுக்கான 'மவுசு' குறைந்து விட்டது. உற்பத்தி செலவு, பராமரிப்பு, அறுவடை போன்றவற்றுக்கும் சிரமம் இருப்பதாலும், மார்க்கெட்டில் விலையும் கிடைக்காததால், சாகுபடி செய்வதில் விவசாயிகளிடையே ஆர்வம் குறைந்துவிட்டது.

நடைமுறை சிக்கல்: தேவையான நுண்ணூட்டச் சத்து சிறு தானியங்களில் அதிகம் இருந்தாலும் நடைமுறை சிக்கலினால், சிறு தானியங்களை உண்போர் மற்றும் உற்பத்தி செய்வோர் குறைந்து விட்டனர். கரும்பு நெல் போன்ற பயிர்களுக்கு ஆர்வம் காட்டும் விவசாயத் துறையினர், சிறு தானிய உற்பத்தியை ஊக்குவிக்க முன்வருவதில்லை. நெல்லில் புதிய ரகங்கள் கண்டுபிடித்து உற்பத்தியை பெருக்கும் விஞ்ஞானிகள், சிறு தானியங்கள் உற்பத்தி குறித்து ஆர்வம் காட்டவில்லை. பயிர் விளைச்சல் போட்டிகளை நடத்திடும் விவசாயத் துறையினர், சிறு தானியங்களை கண்டுகொள்ளவில்லை.

ஊக்குவிப்பு இல்லை: வறட்சியை தாங்கும் இலவம், கொட்டை முந்திரிகளை நடவு செய்து வருகின்றனர். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் கூட சிறு தானிய உற்பத்தியை பெருக்க ஊக்குவிப்பு இல்லை. கானம், கொள்ளு போன்ற பயிர்கள் கரூர், விருதுநகர் மாவட்டங்களில் மட்டுமே சிறிய அளவில் விளைச்சல் செய்யப்படுகிறது.
விவசாயத் துறையினர் கவனத்திற்கு: கடந்த ஆறு ஆண்டுகளாக இதன் சாகுபடி அளவு குறைந்து விட்டன. 'கொள்ளுச்சாறும் சாமைச்சாறும் சாப்பிடுபவர் யானை பலம் கொண்டவர்களாக இருப்பர்' என்பது பழமொழி. அந்த அளவிற்கு கொள்ளில் அதிக இரும்பு மற்றும் நுண்ணூட்டச் சத்து இருந்தும், இவைகள் புறக்கணிக்கப்பட்டதால் அழிந்து வருகின்றன. பழமையான இந்த சிறு தானியங்களை, அழிவில் இருந்து காத்திட விவசாயத் துறையினர் முன்வர வேண்டும்.

---

**கரும்பு டன்னுக்கு 2,000 ரூபாய்**
*மார்ச்* 20,2010,00:00 IST



சென்னை:வரும் அரவை பருவம் முதல், போக்குவரத்து கட்டணம் மற்றும் ஊக்கத் தொகையுடன் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும் என, தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.சட்டசபையில், நிதியமைச்சர் அன்பழகன் தாக்கல் செய்த பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது:

விவசாயிகள் பயிர்க்கடன் பெற, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2009 -10ம் ஆண்டில் 2,000 கோடி ரூபாய்க்கு இலக்கு நிர்ணயித்து, இதுவரை 2,013 கோடி ரூபாய் கடன் அளிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்த இலக்கு 2,500 கோடி ரூபாயாக உயரும்.கூட்டுறவு பயிர்க்கடன்களை முறையாக திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் மீதான வட்டியை முற்றிலும் ரத்து செய்ய இந்த பட்ஜெட்டில், 140 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர் இழப்பீட்டிற்கான காப்பீட்டுத் திட்டத்தில், 2009-10ல் ஏழு லட்சத்து 80 விவசாயிகள் உள்ளனர். காப்பீட்டுத் தொகையில் 50 சதவீதம் அரசே மானியமாக வழங்கும் திட்டத்திற்காக, கடந்த நான்கு ஆண்டுகளில் 891 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.இந்த பட்ஜெட்டில், காப்பீட்டு மானியமாக 40 கோடி ரூபாயும், இழப்பீட்டு தொகைக்கான அரசின் பங்காக 200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்படும் ஒரு டன் கரும்புக்கு நடப்பு அரவை பருவத்திற்கு, போக்குவரத்து கட்டணம், சர்க்கரை கட்டுமான ஊக்கத் தொகையுடன் சேர்த்து 1,550 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில், நடப்பு அரவை பருவத்திற்கு கூடுதல் விலையாக 100 ரூபாய் வழங்கப்படும்.வரும் அரவைப் பருவத்திற்கு (2010 -11) போக்குவரத்து கட்டணம் மற்றும் ஊக்கத் தொகை சேர்த்து டன் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படும்.இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

**குவிண்டால் நெல்லுக்கு 1,000 ரூபாய்**

*மார்ச்* 20,2010,00:00 IST



ஒரு குவிண்டால் நெல்லுக்கு 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கை இந்த பட்ஜெட்டில் ஏற்கப்பட்டுள்ளது.சட்டசபையில் நிதியமைச்சர் அன்பழகன் வெளியிட்ட பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதாவது:ஒரு குவிண்டால் நெல்லுக்கு 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசின் விலையை விட கூடுதல் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

அதன் படி சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு 1,050 ரூபாய், சன்ன ரகத்திற்கு 1,100 ரூபாய் வழங்கப்படுகிறது. நெல் கொள்முதல் ஊக்கத் தொகை வழங்க 200 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.நீர் பயன்பாட்டை குறைக்கும் செம்மை நெல் சாகுபடித் திட்டத்தில் 2009 -10ம் நிதியாண்டு வரை 15 லட்சம் ஏக்கர் நிலம் கொண்டு வரப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் மேலும் ஆறு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் கூடுதல் நிலப்பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

துல்லியப் பண்ணை முறை மூலம் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடும் முறை இதுவரை 57 ஆயிரத்து 500 ஏக்கரில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் மேலும் 35 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு சேர்க்கப்படும்.சொட்டு நீர்ப் பாசனத் திட்டம், வரும் நிதியாண்டில் மேலும் 75 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன் பெறும் வகையில் மேற்கொள்ளப் படும். இயற்கை வழி விவசாயம் மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமான தரச் சான்றிதழ் வழங்கும் அமைப்பை அரசு உருவாக்கியுள்ளது.இயற்கை வழி வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணைகள் வேளாண் துறையால் அமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.கடந்த மூன்றாண்டில் 10 ஆயிரம் விவசாயிகள், 28 ஆயிரம் ஏக்கரில் 56 வகை பயிர்களை இயற்கை வழி வேளாண்மை மூலம் பயிர் செய்ய பதிவு செய்துள்ளனர். இயற்கை வழி வேளாண்மையில் அதிக நெல் உற்பத்தித் திறன் காட்டி சாதனை புரியும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.இலவச மின்சாரம் வழங்க மானியமாக, மின் வாரியத்திற்கு, 295 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. விசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் இதுவரை 76 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடியே 73 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்க பட்ஜெட்டில் 152 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.